பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**05 02 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா உள்ளிட்ட 36 நாடுகளுடன் இந்தியா வர்த்தக ஒப்பந்தங்களை செய்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார்.

2. பிரதமர் திரு நரேந்திர மோடி பங்குபெறும் பரிக்ஷா பே சர்ச்சா கலந்துரையாடல் நிகழ்ச்சி நாளை காலை பத்து மணிக்கு இடம்பெறுகிறது.

3. நாட்டின் எரிசக்தி பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. சட்டீஸ்கர் மாநிலம் பிஜப்பூர் மாவட்டத்தில் 12 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

5. மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் தில்லி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

-இனி விரிவான செய்திகள் --

<<<<<<<>>>>>>

ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மத்திய அரசு முனைப்புடன் நிறைவேற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு பதிலளித்து பேசிய பிரதமர், ஐரோப்பிய யூனியனின் 27 நாடுகள் மற்றும் இதர ஒன்பது நாடுகளுடன் இதுவரை வர்த்தக ஒப்பந்தங்கள் செய்து முடிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மேலும் பல நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை இந்தியா எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் உற்பத்தித் துறைக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் அதற்கான கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் முழுவீச்சில் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

வலிமையான இளைஞர் சக்தியை கொண்ட இந்தியாவின் வளர்ச்சியை உலக நாடுகள் உற்றுநோக்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் உலகில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டுவரும் சூழ்நிலையில் பல நாடுகள் இந்தியா மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

உலக அரங்கில் அனைத்துத் துறைகளிலும் போட்டிகளை எதிர்கொள்ளும் நம்பிக்கையை இந்தியா பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுத்து வருவதாக கூறிய அவர், சீர்திருத்த கொள்கை முடிவுகளை எடுப்பதில் நாம் உறுதியுடன் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சீர்திருத்தம், செயல்திறன், மேம்பாடு ஆகியவற்றை தாரக மந்திரமாக கொண்டு அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

குடியரசுத் தலைவர் உரையில் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி நாம் விரைந்து முன்னேறி வருவதாக கூறியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியா விரைவான வளர்ச்சி பெற்றுள்ள போதிலும், பணவீக்க விகிதம் மிகவும் குறைவாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில், நாட்டின் பொருளாதாரம் மிகவும் பின்தங்கியிருந்ததாக அவர் குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் தலைமையிலான அரசு தொலைநோக்கு பார்வையின்றி, உறுதியான முடிவுகளை எடுக்காத சூழ்நிலை இருந்து வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் ஏற்பட்ட தவறுகளை சரிசெய்து வருவதால்தான் நாடு வளர்ச்சிப் பாதையில் விரைந்து முன்னேறி வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<<<>>>>>>

மாணவர்களிடையே தேர்வு குறித்த அச்சத்தை போக்குவதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி பங்குபெறும் பரிக்ஷா பே சர்ச்சா-வின் ஒன்பதாவது கலந்துரையாடல் நிகழ்ச்சி நாளை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தில்லியிலிருந்து பிரதமர் பங்குபெறும் இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர், ராய்பூர், குவஹாத்தி, **Devmogra** மற்றும் நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் காணொலி வாயிலாக இந்த கலந்துரையாடல் நடைபெறும்.

மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் இதில் கலந்துகொள்கிறார்கள்.

10 மற்றும் 12-ஆம் வகுப்பு அரசு தேர்வு எழுதும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்த நிகழ்ச்சி இடம்பெறும்.

அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன், யூ டியூப் அலைவரிசைகளிலும், மத்திய கல்வி அமைச்சகத்தின் சமூக வலைதளங்களிலும் இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பப்படுகிறது.

வேவ்ஸ் ஓ டி டி, அமேசான் பிரைம், ஜியோ Spotify உள்ளிட்ட ஓ டி டி தளங்களிலும் பிரதமர் பங்குபெறும் பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சி நாளை நேரடியாக ஒளிபரப்பப்பட உள்ளது.

<<<<<<>>>>>>

நாட்டின் எரிசக்தி பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், சர்வதேச சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப, நாட்டின் எரிசக்தி பயன்பாட்டுக்கான ஆதாரங்கள் தெரிவு செய்யப்படுவதாக கூறினார்.

வெனிசுலாவிலிருந்து நீண்ட நாட்களாக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், **2019-20-**ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட பொருளாதார தடை காரணமாக அந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டதாக கூறினார்.

**2023-24-**ல் அந்த தடை நீக்கப்பட்ட பிறகு மீண்டும் அந்நாட்டிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எரிசக்தி பாதுகாப்பின் உறுதியான அணுகுமுறையை இந்தியா பின்பற்றி வருவதாக தெரிவித்த அவர், வர்த்தக சூழலுக்கு ஏற்ப கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் முடிவில் அவ்வப்போது மாற்றங்கள் ஏற்படுவதாகவும் கூறினார்.

அமெரிக்கா வரிக்குறைப்பு செய்ததையடுத்து, பிரதமர் திரு நரேந்திர மோடி, அந்நாட்டு அதிபர் திரு டோனல்டு ட்ரம்புடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு நன்றி தெரிவித்தார் என்றும், உற்பத்திக்கான இந்தியா திட்டத்தில் தயாரிக்கப்படும் பொருட்கள் ஏற்றுமதிக்கான வரியை **18** சதவீதமாக குறைக்கப்படும் என்று பிரதமர் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இந்திய — அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், இந்தியாவின் ஏற்றுமதிக்கு உத்வேகம் அளிப்பதோடு, தொழிலாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளை அளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்படுவதோடு, பொருளாதாரமும் விரைந்து வளர்ச்சி பெறும் என்றும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வார் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

சட்டீஸ்கர் மாநிலம் பிஜப்பூர் மாவட்டத்தில் 12 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர். இவர்களில் எட்டு பேர் பெண்கள்.

பஸ்தார் பகுதியில் காவல்துறை தலைமை இயக்குனர் திரு சுந்தர்ராஜ் மற்றும் மத்திய ரிசர்வ் படையின் மூத்த அதிகாரிகள் முன்னிலையில் இவர்கள் சரணடைந்தனர்.

அவர்கள், ஏகே-47 ரக துப்பாக்கி, எஸ் எல் ஆர் துப்பாக்கி மற்றும் இதர ஆயுதங்கள், வெடிப்பொருட்களை ஒப்படைத்தனர்.

இயல்பு வாழ்க்கைக்கு திரும்பும் நக்சலைட்டுகள் அரசியல் சாசனத்தின்மீது நம்பிக்கை கொண்டு, ஜனநாயக பாதையில் செயல்படுவதாக உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

சரணடைந்த நக்சலைட்டுகளின் மறுவாழ்வுக்காக தலா 50 ஆயிரம் ரூபாய் உதவித்தொகையும் அப்போது வழங்கப்பட்டது.

<<<<<<<>>>>>>

வாழை ஏற்றுமதியில் இந்தியா முதலிடத்தில் உள்ளதாக தேசிய வாழை ஆராய்ச்சி மைய இயக்குனர் டாக்டர் ஆர் செல்வராகவன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் வேலூர் மாவட்டம் காட்பாடியில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கை தொடங்கிவைத்து பேசிய அவர், தேசிய வாழை ஆராய்ச்சி மையம் ஒன்பது புதிய வாழை ரகங்களை வெளியிட்டுள்ளதாக தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மண்வளத்தை பாதுகாக்க வேண்டும் என்றும் திரு செல்வராகவன் கேட்டுக்கொண்டார்.

**(*Sound Byte — செல்வராகவன் - 42 Sec.* )**

<<<<<<<>>>>>>

**தேர்தலின் போது, அரசியல் கட்சிகள் இலவச திட்டங்களை அறிவிப்பதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவினை மார்ச் மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உச்சநீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளது.**

**இதுதொடர்பாக, கடந்த 2022ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட மனு, விசாரணைக்கு பட்டியலிடப்படவில்லை என்று வழக்கறிஞர் மற்றும் மனுதாரர் தெரிவித்திருந்ததை அடுத்து உச்சநீதிமன்றம் மார்ச் மாதம் இதனை பட்டியலிட முடிவு செய்தது.**

**செயல்படுத்த முடியாத இலவச திட்டங்களை அறிவிக்கும் கட்சிகளின் சின்னங்களை முடக்குவதோடு, அவற்றிற்கான அங்கீகாரத்தையும் ரத்து செய்ய வேண்டும் என்று கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.**

<<<<<<<>>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

**மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் தில்லி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.**

வதோதராவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களூரு முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

-------------

ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் ஜப்பானை வென்றது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா இந்த வெற்றியை பெற்றது.

----------------------

ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சம்ரத் ரானா - Suruchi Singh இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், கலப்பு குழு பிரிவு பத்து மீட்டர் பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் உஸ்பெகிஸ்தான் இணை தங்கப்பதக்கம் வென்றது.

இப்போட்டியில், இந்தியா இதுவரை 2 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளது.

<<<<<<<**END**>>>>>>